(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023**

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

**5 th Term Examination - 2023**

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr : 13 (2023) | 22 | T | I |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்.

## பகுதி - I

1. போக்குவரத்து வலைப்பின்னல், குடியிருப்புப் பாங்குகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகளை விபரணம் செய்வதற்குப் பொருத்தமான படவரை கலையியல் நுட்பமுறை.
   (1) கோட்டு வரைபு (2) வட்டவரைபு (3) பல்பார் வரைபு
   (4) சமகணியப்படம் (5) இடவிளக்கப்படம் (……….)

2. 1 : 50 000 இடவிளக்கப்படங்களில் உயரமான மலைப்பிரதேசங்களின் வளம் இல்லாத பகுதிகளைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடு.
   (1) திருகோணகணித நிலையம் (2) வெளியரும்பிய பாறை (3) பின்வாங்கும் அருவி
   (4) சுவடு (5) பள்ளத்தாக்கு (……….)

3. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையில் (GPS) 24 செய்மதிகள் மூலம் தகவல்களைச் சேகரிக்க முடியுமாக இருக்கும் போது, 31 செய்மதிகள் வான் வெளிப்பிரிவில் நிறுத்தப்படக் காரணம் யாது?
   (1) செயலற்றுப்போகும் செயற்கைக் கோள்களுக்குப் பிரதியீடாகச் செயற்படுவதற்கு.
   (2) தகவல்களைத் துல்லியமாகப் பெற்றுக்கொள்வதற்கு.
   (3) நேர வீண் விரயத்தினைக் குறைப்பதற்கு
   (4) மனித உழைப்பினை மதிப்பிடுவதற்கு
   (5) தரவுகளை விரைவாக அனுப்புவதற்கு
   (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. புவியியல் தகவல் முறையில் (GIS) தரவுகள் களஞ்சியப்படுத்தப்படும் இரு முறைகளும் எவை?
(1) எண்ணிலக்கத்தரவு, செய்மதிப் படிமங்கள் (2) காவித்தரவு, பரவல் தரவு
(3) எண்ணிலக்கத்தரவு, பரவல் தரவு (4) செய்மதிப்படிமங்கள், காவித்தரவு
(5) அளவுசார் தரவு, தொடர் தரவு (……….)

5. பின்வருவனவற்றிலிருந்து 1 : 50 000 இடவிளக்கப்படங்களில் உள்ளடக்கப்படும் இரண்டு சேவை நிலையங்களை உள்ளடக்கும் விடையைத் தெரிக.
(1) பௌத்த விகாரை, பாடசாலை (2) இந்துக் கோவில், பள்ளிவாசல்
(3) பாடசாலை, வைத்தியசாலை (4) பொலிஸ் நிலையம், பாதுகாக்கப்பட்ட வன எல்லை
(5) மணல்மேடு, கமநல சேவை நிலையம் (……….)

6. பின்வருவனவற்றிலிருந்து இரண்டாம் நிலைத் தரவுகள் உள்ளடங்கிய விடைகளைத் தெரிக.
(1) வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல்
(2) இணையம், நூலகம், வினாக்கொத்து
(3) நேர்காணல், செய்மதிப்படிமம், நூலகம்
(4) நேர்காணல், நூலகம், இணையம்
(5) செய்மதிப்படிமங்கள், வினாக்கொத்து, நேர்காணல் (……….)

7. நதிகள், கிணறுகளின் நீர்மட்டம் மாற்றம் அடையும் விதத்தினை அவதானிப்பது.
(1) அளவீடுகள் எனப்படும் (2) நேரடி அவதானம் எனப்படும்.
(3) பங்கேற்பு அவதானம் எனப்படும். (4) கலந்துரையாடல் எனப்படும்.
(5) நேரடி கலந்துரையாடல் எனப்படும். (……….)

8. தரவுப் பரம்பல் ஒன்றின் 50 % சதவீதமான பெறுமானங்களை எடுத்துக்காட்டுவது?
(1) மேல்காலணை (2) வீச்சு (3) கீழ்காலணை
(4) இடைக்காலணை (5) காலணை வீச்சு (……….)

9. நாடு ஒன்றின் சனத்தொகையின் பால் விகிதம், வயதுக்கட்டமைப்பு என்பவற்றை எடுத்துக்காட்டப் பயன்படும் வரைபு எது?
(1) கூம்பக பார் வரைபு (2) பல்கோட்டு வரைபு (3) பல்பார் வரைபு
(4) இரட்டைபார் வரைபு (5) வட்ட வரைபு (……….)

10. மழைவீழ்ச்சி பற்றிய தரவுகளை ஒப்பீடு செய்வதற்குப் பொருத்தமான வரைபு எது?
(1) திரள் மீடிறன் வளையி (2) திரள் மீடிறன் சதவீத வளையி (ஒகிவ்)
(3) மீடிறன் பல்கோணி வரைபு (4) விலகல் வரைபு
(5) பிரிக்கை வரைபு (……….)

11. புவியை நோக்கி வருகின்ற விண்கற்களின் எரிதல் இடம்பெறுகின்ற வளிமண்டலப் படை எது?
(1) வெப்பமண்டலம் (2) இடை மண்டலம் (3) மாறன் மண்டலம்
(4) படை மண்டலம் (5) அயன் மண்டலம் (……….)

12. இலங்கையில் மிற்றியா கொட, பெரலஸ்கமுவ, வஸ்கமுவ ஆகிய பிரதேசங்களில் பரந்துள்ள கனிய வகை எது?
(1) பீங்கான்களி (2) பந்துக்களி (3) ஒட்டுக்களி (4) கெயோலின்களி (5) கனியமணல்
(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. இலங்கையின் ஈர, உலர் வலயங்கள் இரண்டிலும் உள்ள மண் வகைகளுள் ஒன்று.
(1) செங்கபிலநிற மண் (2) செம்மஞ்சள் பொட்சொல் மண்
(3) கிரமுசோல் மண் (4) செம்மஞ்சள் லொராசோல் மண்
(5) ரெகசோல்ஸ் மண் (……….)

14. கிழக்கு ஆபிரிக்கப் பிளவுப் பள்ளத்தாக்கு உருவாகக் காரணமான விசை.
(1) அகவிசை (2) இழுவிசை (3) கண்டவாக்க விசை
(4) மலையாக்க விசை (5) உதைப்பு விசை (……….)

15. சமுத்திரத் தகடுகள் இடையோட்டின் பகுதியை நோக்கி உள்ளே தள்ளப்பட்டு அத் தகடுகள் வெப்பமடைந்து உருகித் திரவமாக பெருக்கெடுப்பதனால் உருவாகும் நிலவுருவம்.
(1) தீப்பாறைத் தீவுகள் (2) மடிப்பு மலைகள் (3) அகழிகள்
(4) குறைகள் (5) பிதிர்வுக் குறை (……….)

16. மக்மா புவியின் பாறைப் படைத் தளங்களுக்குக் கீழ் படிந்து இறுகுவதனால் உருவாகும் நிலவுருவங்கள்.
(1) தள்ளல் நிலவுருவங்கள் (2) தலையீட்டு நிலவுருவங்கள்
(3) சாம்பல்கூம்பு (4) எரிமலைத்தீவு
(5) எரிமலைவாய் ஏரி (……….)

17. பாலைவனப் பகுதிகளில் காற்றின் கொண்டுசெல்லல் செயற்பாட்டின் மூன்று வகையையும் தரும் விடை எது?
(1) வாரியிறக்கல், தேய்த்தல், அரைந்து தேய்த்தல்
(2) உராய்தல், தேய்த்தல், அரைந்து தேய்த்தல்
(3) தொங்கல், பாய்ச்சல், இழுத்துச் செல்லல்
(4) பிடுங்குதல், பறித்தல், தேய்த்தல்
(5) நீரியற் தாக்கம், அரைந்து தேய்த்தல், தேய்த்தல் (……….)

18. காஸ்ட் பிரதேச நிலவுருவங்கள் இரண்டினைக் கொண்டுள்ள விடையைத் தெரிக.
(1) குவடு, பீடைக்கிடைத்திணிவு (2) கடற்கீழ்குகை, கெண்டித்துளை
(3) கசிந்துளி வீழ்வு, யடாங்கு (4) போல்ஜே, உவாலஸ்
(5) பானைக்குழிவு, குத்துப்பாறை வாற்குன்று (……….)

19. நிலச்சரிவு ஏற்படப் போவதனை ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொள்வதற்கு உதவுகின்ற காரணிகளில் ஒன்று.
(1) சேற்றுடன் கூடிய நீர் வழிந்தோடல் (2) செறிவான மழைவீழ்ச்சி
(3) தரையின் கட்டமைப்பு சீராதல் (4) நிலம் சமநிலைப்படல்
(5) நிலவெடிப்புக்கள் சீரடைதல் (……….)

20. ஒரு ஒட்சிசன் மூலக்கூறு இரண்டு ஐதரசன் மூலக்கூறுகளின் சேர்க்கையின் விளைவாக உருவாவது.
(1) மண் (2) வளி (3) மணல் (4) கனியம் (5) நீர் (……….)

21. இலங்கையின் காற்று ஒதுக்குப் பக்கத்தில் காணப்படும் காலநிலை வலயம்.
(1) அரைவரள் வலயம் (2) உயர்நில ஈரவலயம் (3) உயர்நில உலர்வலயம்
(4) தாழ்நில உலர்வலயம் (5) தாழ்நில ஈரவலயம் (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22. பருவகால நதிகள் என்றால் என்ன?
   (1) வருடம் முழுவதும் நீர் நிறைந்து காணப்படும் நதிகள்
   (2) நீர் வற்றிய நதிப் பள்ளத்தாக்குகள்
   (3) ஈர வலயத்தில் காணப்படும் நதிகள்
   (4) மழை காலத்தில் நீரினைக் கொண்டிருப்பதுடன், மழை இல்லாத காலத்தில் நீரின்றிக் காணப்படும் நதிகள்.
   (5) நீரேந்து பிரதேசங்கள் (……….)

23. கல் ஓயா, மாதுறு ஓயா ஆகிய தாழ்நில உலர்வலயப் பகுதிகளில் பரந்துள்ள புல் நிலங்கள் எவை?
   (1) தலாவைப் புல்நிலங்கள்
   (2) வில்லுப்புல் நிலங்கள்
   (3) ஈரப் பத்தனா புல்நிலங்கள்
   (4) வரண்ட பத்தனா புல்நிலங்கள்
   (5) முட்புதர் காடுகள் (……….)

24. இலங்கையின் கடற்புல் நிலங்கள் காணப்படும் இரு இடங்கள் எவை?
   (1) மின்னேரியா, கிரிந்தல
   (2) மண்டைதீவு, கோணேசபுரம்
   (3) முந்தல், புந்தல
   (4) புத்தளம், யாழ்ப்பாணம்
   (5) மன்னம்பிட்டி, வில்பத்து (……….)

25. பின்வருவனவற்றிலிருந்து காலநிலை ரீதியான இடரினைத் தெரிவு செய்க.
   (1) புவிநடுக்கம்
   (2) எரிமலை வெடிப்பு
   (3) வெள்ளப்பெருக்கு
   (4) காட்டுத்தீ
   (5) மண்சரிவு (……….)

26. இலங்கையில் புராதன கிராமங்கள் அதிகளவில் காணப்படும் காலநிலை வலயங்கள் எவை?
   (1) உலர்நில உலர்வலயம், தாழ்நில உலர்வலயம்
   (2) ஈரவலயம், உலர் வலயம்
   (3) தாழ்நில உலர் வலயம், அரைவரள் வலயம்
   (4) தாழ்நில ஈரவலயம், உயர்நில ஈரவலயம்
   (5) அரைவரள் வலயம், ஈரவலயம் (……….)

27. குடித்தொகையில் தங்கி வாழ்வோர் என்பதனால் கருதப்படுவது யாது?
   (1) 15 வயதிற்குக் கீழ்பட்டவர்களும் 65 வயதிற்கு மேற்பட்டவர்களும் நாட்டின் தொழிலாளர் வயதுப் பிரிவில் தங்கியிருப்பதாகும்.
   (2) 15 வயதிற்குக் கீழ்பட்ட வயதுப் பிரிவினர் பெற்றோரில் தங்கி வாழ்வதாகும்.
   (3) 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் பிள்ளைகளில் தங்கியிருப்பதாகும்.
   (4) உழைப்பாளர் படையில் வேலையற்று இருப்பவர்களைக் குறிக்கும்.
   (5) 15 வயதிற்கு உட்பட்ட பெண்பிள்ளைகளையும் 65 வயதிற்கு மேற்பட்ட பெண்களையும் குறிக்கும். (……….)

28. இலங்கையின் குடித்தொகையின் வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இரண்டினைத் தரும் விடைகளைத் தெரிவு செய்க?
   (1) பிறப்பு வீதம் அதிகம், இறப்பு வீதம் குறைவு
   (2) சிசு மரண வீதம் அதிகம், கற்பிணித்தாய் மரணவீதம் குறைவு
   (3) பிறப்புகளில் வீழ்ச்சி, வாழ்வு எதிர்பார்ப்புக் காலத்தில் அதிகரிப்பு
   (4) பெண்களின் வாழ்வு எதிர்பார்ப்புக் காலத்தில் வீழ்ச்சி, கல்வி அறிவு வீத அதிகரிப்பு
   (5) சிறுவர் தொகையில் அதிகரிப்பு, வயது முதிர்ந்த தங்கி வாழ்வோரில் வீழ்ச்சி. (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

29. குடியிருப்பின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற வலையமைப்பு என்பதனுள் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை?
(1) குடியிருப்பினைக் கட்டியெழுப்புகின்ற மனிதன்
(2) குடியிருப்பிற்குப் பாதுகாப்பினை வழங்குகின்ற கட்டங்கள்
(3) குடியிருப்பின் அமைவினைத் தீர்மானிக்கின்ற பௌதிகச் சூழல்
(4) குடியிருப்பின் அமைவினைத் தீர்மானிக்கின்ற பண்பாட்டுச் சூழல்
(5) குடியிருப்பின் வேறொரு பகுதியுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற போக்குவரத்து வீதிகள்.
(……….)

30. தற்காலிகக் குடியிருப்புக்கள் (பருவகாலக் குடியிருப்பு) உருவாவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற இரண்டு பொருளாதார நடவடிக்கைகள் எவை?
(1) சேனைப் பயிர்ச் செய்கை, விலங்கு வளர்ப்பு
(2) நெற்செய்கை, மீன்பிடி
(3) நெற்செய்கை, விலங்கு வளர்ப்பு
(4) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, மீன்பிடி
(5) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, சுரங்க மறுத்தல். (……….)

31. இலத்தீன் அமெரிக்காவில் அதிகளவில் நகராக்கத்தினைக் கொண்டுள்ள நாடு எது?
(1) பிறேசில் (2) ஆஜென்ரீனா (3) உருகுவே (4) பெரு (5) சிலி
(……….)

32. யப்பானின் சிறிய கோதுமை இனங்களுடன் இரட்டைக் கலப்பாக்கம் செய்யப்பட்ட நொறின் 10 இனத்தின் பண்புகள் இரண்டினைக் கொண்டுள்ள விடை?
(1) அதிக மழையைத் தாங்க முடியாதது, வளர்ச்சி குறைவு
(2) காற்றினைத் தாங்கக் கூடியது, களைகள் அதிகம்
(3) கடும் காற்றிற்கு ஏற்றது, பெரிய தாவரங்கள்
(4) சிறிய தாவரங்கள், மழையைத் தாங்கக்கூடியது
(5) களைகள் அதிகம், இரசாயனப் பாவனை அதிகம் (……….)

33. பயிர்களுக்கு நீர் வழங்கும் முறைகளில் ஒன்றான நுண் நீர்ப்பாசனத்தில் நீர் விநியோகிக்கப்படும் முறை.
(1) தரையின் மேற்பரப்பினூடாக தாவரங்களுக்கு நீர் பாச்சுவது
(2) தாவரங்களின் வேர்கள் பரந்துள்ள ஆழத்திற்கு ஏற்ப நீர் பாச்சுகின்ற முறை
(3) தூவல் முறையில் நீர் விநியோகிக்கப்படுகின்ற முறை
(4) நீர்ச் சக்கரம் மூலம் நீர் பாச்சுகின்ற முறை
(5) குளங்கள், வடிகாலமைப்புக்கள் மூலம் நீர் பாச்சுகின்ற முறை (……….)

34. சீனாவில் இரும்புத்தாது அதிகளவில் பரந்துள்ள மாகாணம்.
(1) ஷாங்கி (2) கைநான் (3) சான்டோங் (4) யூனான் (5) வூஜியன்
(……….)

35. கணினித்திரை, எக்ஸ்ரே திரையின் நிறமூட்டல், பளபளப்பினை ஏற்படுத்துதல் போன்றவற்றிற்குப் பயன்படுகின்ற கனிய மணலில் இருந்து பிரித்தெடுக்கப்படும் உலோகம்.
(1) டைட்டேனியம் (2) மொனசைட் (3) ரூடைல் (4) சர்கோன் (5) சிலிமனைட்
(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

36. ஐக்கிய அமெரிக்காவில் தரை, கப்பல், விமானம் போன்ற போக்குவரத்துக்களினால் ஒன்றிணைக்கப்பட்ட கைத்தொழில் அமைவிடங்கள்.
(1) பிலடெல்பியா, சான்பிரான்சிஸ்கோ (2) பவ்லோ, லொஸ்ஏஞ்சல்
(3) சிக்காக்கோ, மியாமி (4) பிற்ஸ்பேர்க், ஓகாயோ
(5) மியாமி, சான்பிரான்சிஸ்கோ (……….)

37. இலங்கையின் கிராமங்கள், விசேட கிராமங்களில் பரந்துள்ள கைத்தொழில்கள் எவை?
(1) மட்பாண்டக் கைத்தொழில்கள் (2) பாரம்பரிய கைவினைக் கைத்தொழில்கள்
(3) சீனிக் கைத்தொழில்கள் (4) கடதாசிக் கைத்தொழில்கள்
(5) இரசாயனக் கைத்தொழில்கள் (……….)

38. பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது ஆய்வு நோக்கங்களுக்காக ஒரு நாட்டிற்குச் செல்கின்ற சுற்றுலா எது?
(1) ஆய்வுச் சுற்றுலா (2) பொழுது போக்குச் சுற்றுலா (3) அழகியல் சுற்றுலா
(4) கலாசார சுற்றுலா (5) சூழலியல் சுற்றுலா (……….)

39. இலங்கையின் தென் கரையோர சுற்றுலா வலயத்திலுள்ள பவளப்பாறைகளுக்குப் பிரபல்யமான கடற்கரை எது?
(1) பாசிக்குடா (2) மீரிஸ்ஸ (3) ஹிக்கடுவ (4) நிலாவெளி (5) கொட்டியாரம்
(……….)

40. பூகோள மயமாதலினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சூழல்சார் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணம் யாது?
(1) கைத்தொழில் நாடுகளின் கொள்கைகள்
(2) மேலைத்தேசத்தினை அடிப்படையாகக் கொண்ட உலக கலாசார பரவல்
(3) பௌதிக, மனித வளங்களைப் பரிமாறிக் கொள்ளும் தன்மை
(4) விருத்தியடைந்த, விருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார ஏற்றத்தாழ்வு
(5) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் பின்பற்றுகின்ற போட்டித் தன்மையான போக்கு (……….)

(40 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# பகுதி II

## அறிவுறுத்தல்கள்

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் *1 : 50 000* அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப் படமும் வழங்கப்படும்.
- இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட *1 : 50 000* அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

## குறிப்பு

- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.
- உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.

*1.*

(i) *1 – 4* இலக்கத்தினால் குறித்துக்காட்டப்பட்டிருக்கும் விடயங்களைப் பெயரிடுக. *(02 ள்ளிகள்)*

(ii) நாற்பக்கல் A இல் காணப்படும் அம்சங்களை *1 : 25 000* என்னும் அளவுத்திட்டத்தில் மீளவும் வரைந்து காட்டுக. *(03 புள்ளிகள்)*

(iii) A சதுரத்தில் உள்ள சேவை மையங்கள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) படப்பகுதியில் காணப்படும் நெற்பயிர்ச் செய்கைப் பரம்பலைத் தீர்மானித்த பௌதிகக் காரணிகள் இரண்டினை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(v) படப் பகுதியின் குடியிருப்புப் பரம்பலின் போக்கினை சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(vi) இப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும்

  (a) பெருந்தோட்டப் பயிர்

  (b) பிறபயிர் இரண்டினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(vii) ஒப்பீட்டு ரீதியில் வடமேற்குக் கால்பகுதியின் பொருளாதார நடவடிக்கைகள் குறைவாக இருக்கின்றமைக்கான இரண்டு காரணங்களை விளக்குக. *(03 புள்ளிகள்)*

*2.* தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) பாஸ் தொடுகடல் (ii) அற்லஸ் மலைத்தொடர் (iii) மிசூறி மிசுசிப்பி நதி

(iv) லானோஸ் புல்வெளி (v) தக்கண மேட்டு நிலம் (vi) சோமாலியா

(vii) பிறேசிலியன் நீரோட்டம் (viii) கடகக்கோடு

(ix) அதிக பிறப்பு வீதத்தினை உடைய ஐரோப்பிய நாடு

(x) அவுஸ்ரேலியாவில் இரும்புத் தாது பரந்துள்ள பிரதேசம்

*(10 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி III

3. (i) புவியியல் தகவல் முறைமை (GIS) யின் (தரவு தவிர்ந்த) நான்கு கூறுகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) புவியியல் தகவல் முறைமையில் தரவுகள் சேமிக்கப்படுகின்ற இரண்டு முறைகளை விளக்கப் படங்களின் உதவியுடன் விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தில் (RS) தரவு சேகரிப்பதற்குப் பயன்படுகின்ற தொலையுணர்வின் மேடைகள் என்பதனை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) தொலையுணர்வுத் தொழில்நுட்பம் பிரயோகிக்கப்படும் மூன்று துறைகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

4. அட்டவணை *1* இல் இலங்கையின் *2013 – 2022* காலத்திற்குரிய நெல் உற்பத்தி (M.T) தரப்பட்டுள்ளது.

அட்டவணை – I இலங்கையின் *2013 – 2022* யால போக நெல் உற்பத்தி (M.T)

| ஆண்டு | நெல் உற்பத்தி |
|---|---|
| *2013* | *8504* |
| *2014* | *5487* |
| *2015* | *9309* |
| *2016* | *7272* |
| *2017* | *4358* |
| *2018* | *7344* |
| *2019* | *7282* |
| *2020* | *9222* |
| *2021* | *1007* |
| *2022* | *7005* |
| மொத்தம் | *66790* |

**மூலம் - இலங்கை விவசாயத் திணைக்களம் - 2022**

(i) அட்டவணை I இன் தரவுகளைப் பயன்படுத்தி (a) இடை (b) விலகல் (c) சராசரி விலகல் ஆகியவற்றைக் கணிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(ii) மேலே *3* (i) உம்மால் கணிப்பிடப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி விலகல் வரைபு ஒன்றினை வரைக. *(06 புள்ளிகள்)*

(iii) மேலே நீர் வரைந்த வரைபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் யால பருவத்தின் நெல் உற்பத்தியில் காணப்படும் மூன்று முனைப்பான அம்சங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

5. (i) இரண்டாம் நிலைத்தரவு என்பதனால் கருதப்படுவது யாது? *(03 புள்ளிகள்)*

(ii) இரண்டாம் நிலைத்தரவு மூலகங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(iii) தரவு சேகரிக்கும் நுட்பமுறையில், வினாக்கொத்தின் வடிவமைப்பு நுட்பங்கள் மூன்றினை விளக்குக? *(05 புள்ளிகள்)*

(iv) வினாக்கொத்து நுட்பமுறையூடாகத் தரவு சேகரிக்கும் போது எதிர்நோக்கப்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

6. (i) கருப்பொருள் படங்கள் தயாரிக்கப்பயன்படுகின்ற நுட்பமுறைகள் இரண்டினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) தற்காலத்தில் வாழ்வின் நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக படங்கள் பயன்படுத்தப்படுகின்ற மூன்று துறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) கணினிப்படங்களின் பாவனை அதிகரிப்பதற்கான மூன்று காரணிகளை விளக்குக.*(05 புள்ளிகள்)*

(iv) கடதாசியில் அச்சிடப்பட்ட படங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுகின்ற மூன்று உபகரணங்களைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023**

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

**5th Term Examination - 2023**

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - II / Geography - II | Three Hours / Gr : 13 (2023) | 22 | T | II |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## அறிவுறுத்தல்கள்:

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – I
## பௌதிகப் புவியியல்

1. (i) புவியியல் நீர் வளம் பரந்துள்ள இரண்டு நிலைகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
   (ii) உலக நீர் வளத்தினைப் பாதிக்கின்ற மூன்று காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (iii) நீர் வளம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (iv) நீர் வளத்தினைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

2. (i) அகவிசை, புறவிசை என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*
   (ii) அமுக்க விசைகளினால் உருவாக்கப்படும் மூன்று வகையான மடிப்புக்களை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (iii) இழுவிசைகளினால் உருவாக்கப்படும் மூன்று வகையான குறைகளை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (iv) தகட்டு அசைவினால் ஏற்படுகின்ற மூன்று விளைவுகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

3. (i) கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த இரண்டு நியதிகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*
   (ii) கெப்பனின் அயனக்காலநிலையின் மூன்று வகைகளையும் பெயரிட்டு
      (a) அவை பரந்துள்ள பிரதேசங்கள் இரண்டு
      (b) காலநிலைப் பண்புகள்
      (c) இயற்கைத் தாவரம் போன்றவற்றை விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (iii) இலங்கை மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் மூன்று வழிகளையும் விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (iv) இடர்கள், அனர்த்தங்கள் அதிகரிப்பதில் செல்வதற்குச் செலுத்தும் மூன்று மானிடக் காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

4. (i) நதி ஒன்றின் நெடுக்குப் பக்கப்பார்வையின் இரண்டு நிலைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*
   (ii) ஆறு பருப் பொருட்களைக் கொண்டு செல்கின்ற மூன்று முறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iii) ஆற்று தின்னினால் உருவாகின்ற மூன்று அரித்தல் நிலவுருவங்களை விளக்கப் படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஆற்றரிப்பினால் உருவாகின்ற பின்வரும் படிதல் நிலவுருவங்களை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக.


(1) மியாந்தர் வளைவு

(2) பனியெருத்தேரி

(3) கழிமுகம் (06 புள்ளிகள்)

## பகுதி II
## மானிடப் புவியியல்

5. சனத்தொகைக் கூம்பின் நான்கு கட்டங்களும் கீழே தரப்பட்டுள்ளன.




(i) சனத்தொகைக் கூம்பின் நான்கு கட்டங்களையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) A, B ஆகிய சனத் தொகைக் கூம்புகளின் மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) C, D ஆகிய சனத்தொகைக் கூம்புகளின் போக்குகளில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நாடொன்றின் திட்டமிடலுக்கு சனத்தொகைக்கூம்பு ஏன் அவசியமாகின்றது என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) மரபணுத் தொழில்நுட்பத்தின் நான்கு பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பசுமைப் புரட்சியினால் விவசாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு மாற்றங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) பசுமைப்புரட்சியின் விளைவாக ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்களை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) பசுமைப்புரட்சியின் விளைவாக ஏற்பட்ட சுற்றாடல் தாக்கங்கள் மூன்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) சுரங்கக் கைத்தொழில் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) உலக நிலக்கரி வர்த்தகத்தின் மூன்று பண்புகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) உலகின் சுரங்கக் கைத்தொழிலின் மூன்று போக்குகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) உலகின் சுரங்கக் கைத்தொழிலில் காணப்படும் மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

8. (i) இலங்கை சுற்றுலா சபை இனங்கண்டுள்ள நான்கு சுற்றுலா வலயங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையினால் ஏற்படுகின்ற சாதகமான போக்குகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) சுற்றுலாக் கைத்தொழிலினால் இலங்கை எதிர்கொள்கின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டு வரும் மூன்று நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

**தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நடாத்தும் ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023**

**தரம் 13 (2023) புவியியல்** படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)



# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## பரீட்சை - 2023 (ஐப்பசி)

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

**SRI LANKA 1 : 50,000 – SHEET No.76 – HAPUTALE (PART OF)**

